**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

**CC** .No.73/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சித்ராதேதி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :பார்த்தசாரதி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

27.11.2025

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சம்பவம் குறித்து போன் மூலம் வந்த தகவலின்பேரில் தான் எனக்கு தெரியவந்தது என்றாலும் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்தபிறகு தான் எந்த வாகனத்தால் விபத்து ஏற்பட்டது குறித்து நான் தெரிந்து கொண்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது மகன் உலையூர் பள்ளியில் படித்து வந்தார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பொன்னக்கனேரிக்கும், எனது மகன் படித்த உலையூர் பள்ளிக்கும் சுமார் 2, 3 கி.மீ. தொலைவு இருக்கும்.

2) உலையூர் வடக்கு புறமும், அதற்கு அடுத்த தெற்கே பொக்கனானேந்தல் கிராமமும், அதை தடுத்து பொன்னக்கனேரி கிராமமும் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் பள்ளி முடிந்து பொன்னக்கனேரி கிராமத்திற்கு தெற்கு நோக்கி சைக்கிளில் வந்தார் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் குறித்து எனது மாமா பாலையா என்பவர் போன் மூலம் தகவல் அளித்தார். அசா.2 பாலையா எனது மாமா என்றாலும், அசா.3 மாணிக்கம் எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றாலும் சரிதான். நான் நீதிமன்றத்தில் முதல்விசாரணையில் கூறிய சங்கதியைத்தான் நான் போன் மூலம் கேள்விபட்டேன்

என்றால் சரிதான். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து சம்பவ தேதியன்று இரவு 07.00 மணியளவில் போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

3) நான் மருத்துவமனையில் வைத்து வாக்குமூலத்தை படித்து பார்த்து ஒரே ஒரு கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த வாக்குமூலத்திற்கு பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நஷ்டஈடு பெறும் நோக்கில் போலிசார் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

**CC** .No.73/2024

Prosecution witness.03

பெயர் : மாணிக்கம் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

27.11.2025

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் சாட்சி சொல்லிவிட்டு சென்ற சித்ராதேவி (அசா.1) எனக்கு உறவுமுறையினர் என்றால் சரியல்ல ஒரே ஊரைச்சேர்ந்தவர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தனர். சம்பவத்தன்று மாலை 05.00 மணியளவில் எங்கள் ஊரான பொன்னக்கனேரியில் நான் எனது வீட்டில் இருந்தபோது போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் போலிசார் விசாரித்தபோதும் கூறினேனா என்றால் ஆமாம். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் உலையூரிலிருந்து பொன்னக்கனேரியை நோக்கி சொந்தவேலை காரணமாக எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அசா.1 உள்ளூர்காரர் என்பதால் அரசு தரப்பு வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.